செ. கு. எண்: 038 நாள்: 03.03.2018

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K .பழனிசாமி** அவர்களின்

அறிக்கை – 3.3.2018

விழுப்புரம் மாவட்டம், கண்டாச்சிபுரம் வட்டம், வெள்ளம்புத்தூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. ஏழுமலை என்பவரின் மனைவி திருமதி ஆராயி என்பவரின் வீட்டினுள் 22.2.2018 அன்று அதிகாலையில் மர்ம நபர்கள் கொலை வெறி தாக்குதல் நடத்தியதில் சிறுவன் சமயன் உயிரிழந்தான் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்த சிறுவன் சமயன் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மர்ம நபர்கள் நடத்திய கொலை வெறி தாக்குதலில் திருமதி ஆராயி மற்றும் இவருடைய மகள் செல்வி தனம் ஆகிய இருவரும் பலத்த காயமடைந்துள்ளனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் வருத்தம் அடைந்தேன். இவர்கள் விரைவில் பூரண குணமடைந்து வீடு திரும்ப வேண்டும் என்ற எனது விருப்பத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயரச் சம்பவம் குறித்து உரிய விசாரணை மேற்கொண்டு, துரிதமாக குற்றவாளிகளை கண்டுபிடித்து சட்டத்தின் முன் நிறுத்தவும் நான் காவல் துறை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளேன்.

இந்த துயர சம்பவத்தில் உயிரிழந்த சிறுவன் சமயன் குடும்பத்திற்கு இரண்டு லட்சம் ரூபாயும்; காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் திருமதி ஆராயி மற்றும் செல்வி தனம் ஆகியோருக்கு தலா 50,000/- ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**